## திராவிடத்தால் வாழ்கிறோம்

1285

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# வெட்டி அரசின் வெற்றி திட்டங்கள்!

**‘தி.மு.க. அரசின் பழைய திட்டங்களுக்கு எல்லாம், ‘வெற்றி’ என்று சேர்த்து, பெயர் மட்டும் மாற்றும் த.வெ.க. அரசுக்கு, புதிய திட்டங்கள் கொண்டு வர வக்கில்லையா?’ என்று பொதுமக்கள் கேட்கிறார்கள். இந்தக் களங்கத்தைத் துடைக்க, கீழ்க்கண்ட திட்டங்களைக் கொண்டுவரலாம் என்று இலவச ஆலோசனை வழங்குகிறோம்.**



☺ ‘வெற்றி வெறித்துப் பார்க்கும்’ திட்டம் - மூன்று மணி நேரமானாலும் மோட்டுவளையை முறைத்துப் பார்ப்பவர்களுக்கு, பழைய கோட் - சட்டை வழங்கும் திட்டம்.

☺ ‘வெற்றி எடுத்தேன் பாரு ஓட்டம்’ திட்டம் - பத்திரிகையாளர்கள் தன் துறை சார்பாகக் கேள்வி கேட்டால்கூட, பதில் சொல்லாமல் புன்னகையுடன் செல்பவர்களை, பனையூர் வரை இட்டுக்கினு போய் இட்டுக்கினு வரும் திட்டம்.

☺ ‘வெற்றி நோ மீன்ஸ் நோ’ திட்டம் - பிரஸ்மீட்டில் பத்திரிகையாளர்கள் மைக்கை நீட்டினால், ‘நோ கமென்ட்ஸ்’ என்ற ஒரே கமென்ட்டை மட்டும் உச்சரிக்கும் திட்டம்.

☺ ‘வெற்றி குதிரை கமான்… கமான்’ திட்டம் - அடுத்த கட்சி எம்.எல்.ஏ.க்கள் குதிரை பேரத்தில் சிக்கினால், தங்கக்கடிவாளம் போடும் திட்டம்.

☺ ‘வெற்றி தமிழே தகிடுதத்தம்’ திட்டம் - தமிழே பேசத் தடுமாறி, தாறுமாறாக உளறினால், நிதியமைச்சர் பதவி வழங்கும் திட்டம்.

☺ ‘வெற்றி வெட்கமே இல்லை’ திட்டம் - 40 ஆண்டுகளாக நாடாளுமன்ற அனுபவம் இருந்தாலும், சட்டசபையில் பேசவே தெரியாதவரை விழாவுக்குக் கூப்பிட்டு, மூக்குடைபடுதல் போன்ற மானங்கெட்ட மனிதர்களுக்கு உப்பில்லாத அன்னதானம் திட்டம்.

☺ ‘வெற்றி ரீல்ஸ் வெறி’ திட்டம் - ஒரு இடம் விடாமல் ரீல்ஸ் போட்டுத் திரியும் ஊதாரி மனிதர்களுக்கு ‘இலவச ஐ-போன் வழங்கும் திட்டம்’.

☺ ‘வெற்றி வெறித்தனமா பொய் பரப்பு’ திட்டம் - ‘தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்கள் எல்லாம் நாடு கடத்தப்பட்டார்கள்’, ‘பொது இடங்களில் புகைபிடித்தால் மரணதண்டனை’ போன்ற நம்பவே முடியாத பொய்களை நாலுகால் பாய்ச்சலில் பரப்புபவர்களுக்கு, அரை கிலோ அல்வா வழங்கும் திட்டம்.

## போலி கூட்டமும் கழன்றுவிழும் முகமூடியும்!

**கா**விரி விவகாரத்தில் தடுமாறியதை மறைக்க, தமிழ்நாட்டு எம்.பி.க்களின் கூட்டத்தைக் கூட்டுகிறோம் என மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப த.வெ.க. முயற்சி செய்தது. இதைச் சரியாக உணர்ந்துதான், இந்தப் போலி கூட்டத்தில் தி.மு.க. கலந்துகொள்ளவில்லை. இது தொடர்பாக, பதிவிட்டுள்ள ஆவணப்பட இயக்குநர் பி.ஆர்.அமுதன், ‘காவிரி நீருக்குக் கூட்ட வேண்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தை, அகங்காரத்தின் காரணமாகவும் பொறுப்பின்மையினாலும், கூட்டத்தில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. விமர்சிக்கப்படும் என்பதற்காகவும் நடிகர் மறுக்கிறார்; பயப்படுகிறார். தட்டிக்கழிக்கிறார்’ என விமர்சனம் செய்துள்ளார்.

அவரது பதிவில், ‘நடிகர் கட்சியின் ஆட்சியை வேறு வழியில்லாமல்தான் ஆதரிக்க முடிவெடுத்தனர் இடதுசாரிகளும் வி.சி.க.வும். அப்படித்தான் அவர்களே சொன்னார்கள். பா.ஜ.க. வந்துவிடும், ஆளுநர் ஆட்சி வந்துவிடும் என்றுதானே நடிகரை ஆதரித்தார்கள்? இப்போது எதற்கெடுத்தாலும் நடிகர் ஆட்சியை ஆதரிப்பது, அவர்களுக்கே அவமானமில்லையா? இவர்கள் ஏன் நடிகர் நடத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்குப் போகிறார்கள்?’ எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

‘தி.மு.க.வினரும் அ.தி.மு.க.வினரும் சொல்லும் ஆலோசனைகளை, அனுபவங்களை நான் கேட்க வேண்டுமா என்ற கர்வம் அன்றி, வேறு என்ன காரணம் இருக்கமுடியும்? நாடாளுமன்ற உறுப்பினரே இல்லாத நடிகர், தமிழ்நாட்டு எம்.பி.க்களுக்கு, ஏன் தனித்தனியே அழைப்பு அனுப்பி தொகுதி மறுசீரமைப்பிற்கு எதிராகக் கூட்டுகிறார்? தமக்கு கிடைத்த ஒரு மாநிலங்களவை இடத்தை ஏன் காங்கிரஸுக்குக் கொடுக்க வேண்டும்?

பா.ஜ.க.விற்கு எதிராக அரசியல் செய்யத் துணிச்சல் இல்லாமல் தானே?

தி.மு.க., பா.ஜ.க. எதிர்ப்புக் கொள்கையில் தடம் மாறிவிட்டது என்று நிரூபிக்க வேண்டும் என்பதற்காக, இப்படி ‘நாடகத்தை’ நடத்த முயல்கிறார்கள். காவிரி விவகாரத்தில் தாம் தடுமாறியதை மறைக்க, மக்களது கவனத்தைத் திசைதிருப்ப, இந்த முயற்சி நடக்கிறது. இதைச் சரியாக உணர்ந்து, இந்தப் போலி கூட்டத்தில் கலந்துகொள்ள மறுத்த தி.மு.க. தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்’ எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்

### தளபதியிடம் பெற்ற வாழ்த்து!



2000-ஆம் ஆண்டு, எழும்பூர் பகுதி, சூளை அங்காளம்மன் தெருவில் உள்ள, பழைய 100-வது வட்டத்தில், கழகக் கிளை அலுவலகம் அருகே, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய நம் கழகத் தலைவர் பங்கேற்ற பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போது, எழும்பூர் பகுதி துணை அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த நான், தளபதி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். உடன் மாவட்டச் செயலாளர் அண்ணன் எல்.பலராமன், வட்டச் செயலாளர் மோ.திராவிடமணி, கழகத்தின் இணை அமைப்புச் செயலாளர் ‘அன்பகம்’ கலை ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.



எம்.இ.தேவநிதி

**- எம்.இ.தேவநிதி, தலைமைக் கழகப் பேச்சாளர், எழும்பூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## வலையோசை



**தோழர் மருதையன்**

மாநில உரிமைமீது காங்கிரஸுக்கு திடீர் காதல் – Why Bro? ஏப்ரல் Delimitation bill விவாதத்தில் ராகுல் பேசிய 45 நிமிடத்தில் 13 mins தான் தேறும் என்கிறது, Mint. என் கருத்துப்படி ராகுல் பேசியது 3 pts.

1.Avoiding caste census 2.Women's reservation is a mask 3.To remain in power you take away rep of south & N.East. அந்த உரை மிக மேலோட்டமானது. அசட்டு ஜோக்குகள் நிரம்பிய பிரச்சினையின் seriousness ஐ குலைக்கும் பேச்சு.

நாடாளுமன்ற விவாதத்தின்போது, “எல்லோருக்கும் 50% உயர்த்தி சட்டத்தைத் திருத்தினால் போதும், ஆதரிக்கிறோம்” என்று ஓட்டுக்கு விடுகின்ற தருணத்தில், Self Goal அடித்தார், கே.சி.வேணுகோபால். இதுதான் காங்.பொதுச்செயலரின் அறிவு! Delimitation குறித்த Justice Kurien Joseph committee பரிந்துரையை தி.மு.க. அரசின் நிலைப்பாடாக வழிமொழிந்து, ஏப்ரல் 17 Times of Indiaவில் ஒரு முழுப்பக்க கட்டுரை வெளிவந்துள்ளது. 3 தென் மாநிலங்களை ஆளும் காங்கிரஸ் Delimitation பற்றி அப்படி ஒரு ஆவணத்தை வெளியிட்டிருக்கிறதா? Cow belt-இல் தலையெடுக்க முடியாததால், மாநில உரிமைமீது காதலா? “Delimitation என்பதே பா.ஜ.க.-தி.மு.க. கூட்டு சதி” என்று அவதூறு செய்த த.வெ.க. என்ற BJP Trojan horse இடம் 2 மந்திரி சீட்டுக்காகப் பாசிச எதிர்ப்பை அடகுவைத்திருக்கும் காங்கிரஸுக்கு நாவடக்கம் வேண்டும்.




**U2 Brutus**

‘திருப்பரங்குன்றம் files’ ஆவணப்படம் திரையிட ‘மேலிடம்’ (இந்து முன்னணி) மறுக்கிறது என்று சொன்ன த.வெ.க., FCRA பற்றி மூச்சு கூட விடாத த.வெ.க., ஸ்டாலின் அவர்கள் delimitation-க்கு எதிராக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டும்பொழுது, "delimitation ஒன்றும் மக்கள் பிரச்சினை இல்லை" என்று அறிக்கை வெளியிட்ட த.வெ.க., SIR பிரச்சினை வந்தபொழுது, பொந்துக்குள் ஓடி ஒளிந்துகொண்ட த.வெ.க. இன்னைக்கு தி.மு.க.-பா.ஜ.க. மறைமுகக் கூட்டணி என்று பொய்ப் பிரச்சாரத்தைக் கையிலெடுக்கவே இந்த MP-க்கள் கூட்ட நாடகம். இதற்கு ஒத்து ஒத ஷோஃபா நல கூட்டணிகள்.. மக்கள் பார்த்துகொண்டுதான் இருக்கிறார்கள்...

TVK=BJP



**Aravindakshan B R**

ஊத்தங்கரை MLA வழக்கில் ஜாமீனில் வெளிவந்துள்ள திருநாவுக்கரசு பேட்டி.

கேள்வி : சிங்கப்பூர், பெங்களூருவில் இருந்து ஹவாலா மூலம் பணம் வந்திருப்பதாகச் சொல்கிறார்களே...

பதில் : திருநெல்வேலி அல்வா வேணா தெரியும்ங்க..வேணா வாங்கித்தரேன் சாப்பிடுங்க.. ஹவாலா எல்லாம் தெரியாது.. திவாலா வேணா தெரியும்.. தில்லானா மோகனாம்பாள் வேணா தெரியும்...

ஏங்க.. நீங்க வேற காமெடி பண்ணிக்கிட்டு. 35 நாளா ஜெயில்ல சோறு திங்க முடியலைங்க. தயவு செஞ்சு விடுங்க, பிறகு பேசறேன்.

## நம் வரலாறு

### விலைவாசி உயர்வுப் போராட்டம்!

1962-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நாள், விலைவாசி உயர்வால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களை எடுத்துக் காட்டவும், விவசாய உற்பத்திக்கான பொருள்களின் விலையைக் குறைக்கவும், ஆர்ப்பாட்டங்கள் பொதுக்கூட்டங்களை நடத்தியது கழகம். தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் உள்ள எல்லா முக்கிய நகரங்கள், சிற்றூர்கள், குக்கிராமங்கள் ஆகியவற்றில், கண்டன ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுக்கும் அனுப்பிவைக்கப் பட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900